

விவசாய விஞ்ஞானம்

# விவசாயத்திற்கான சேவைகளைப் பெறத்தக்க நிறுவக கட்டமைப்புக்கள்



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa



## தேர்ச்சி மட்டம் 1.6

விவசாய முயற்சியாண்மையாளர்களுக்கும் முதலீட்டாளர்களுக்கும் தேவையான பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனங்களை இரண்டு வகைப்படுத்தலாம்.



1. அரச நிறுவனங்கள்
2. அரசு சாராத நிறுவனங்கள்
   - தனியார் நிறுவனங்கள்
   - சர்வதேச நிறுவனங்கள்
   - வெகுசன அமைப்புக்கள்
   - விவசாய அமைப்புக்கள்

**விவசாயம் சார் சேவை வழங்கும் அரச நிறுவனங்கள்.**

| நிறுவனம் | கருமங்கள் |
|---|---|
| விவசாயத் திணைக்களம் | விவசாய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்<br>பயிர் வலயமாக்கல்<br>அத்தாட்சிப்படுத்தப்பட்ட வித்து உற்பத்தியும், வித்துக்களை அத்தாட்சிப்படுத்தலும்<br>பயிர்ப்பாதுகாப்பு நடவடிக்கையும் பயிர்பாதுகாப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தலும்<br>தாவரத்தடுப்பு நடவடிக்கையும், தாவரத்தடுப்பு சட்டத்தை அமுல்படுத்தலும்<br>மட்காப்பு நடவடிக்கையும் மட்காப்பு சட்டத்தை நடைமுறைப்படுத்தலும்<br>மாகாண விவசாயத் திணைக்களத்தினூடாக விவசாய விரிவாக்கல் சேவையை நடைமுறைப்படுத்தல் |

| நிறுவனம் | கருமங்கள் |
|---|---|
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>புதிய இயல்தகவுகளை இனங்காணல்<br>ஏற்றுமதி விவசாயப்பயிர்களுக்குரிய வலயங்களை இனங்காணல்.<br>பயிர்ச்செய்கை திட்டங்களை மேற்கொள்ளல்<br>நவீன தொழினுட்பங்களை அறிமுகம் செய்தல்<br>ஏற்றுமதிப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பங்களை அறிமுகம் செய்தல்.<br>ஏற்றமதி விவசாயப் பயிர்களை பிரபல்யப்படுத்தும் விரிவாக்கல் சேவையை மேற்கொள்ளல். |


தொகுப்பு - திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு - திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த.தொ.தொ. (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



| நிறுவனம் | கருமங்கள் |
| --- | --- |
| கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் | ➢ கால்நடை நோய்க்கட்டுப்பாடும் நோய்த்தவிர்ப்பும்<br>➢ புல் மற்றும் விலங்குத்தீன் வகைகளை அபிவிருத்தி செய்தலும் பிரபல்யப்படுத்தலும்<br>➢ கால்நடை உற்பத்தி, கால்நடை அபிவிருத்தி ஆகியவற்றுக்கான ஆராய்ச்சிகள் நடாத்துதல் |

| நிறுவனம் | கருமங்கள் |
| --- | --- |
| கமநல சேவைகள் திணைக்களம் | ➢ விவசாய உள்ளீடுகள் மற்றும் சேவைகளை வழங்குதல்<br>➢ விவசாய வங்கிகள் ஊடாக விவசாய கடன்களை வழங்குதல்<br>➢ விவசாய அமைப்புக்களை நிறுவுதலும் அவற்றைப் பதிவு செய்தலும்<br>➢ விவசாய அமைப்புக்களை வலுவூட்டல், பயிற்சி, அறிவூட்டல்<br>➢ சிறிய நீர்ப்பாசன திட்டத்துக்கான பயிர்ச்செய்கை நாட்காட்டிகளை தயாரித்தல்.<br>➢ விவசாய காணிப்பதிவேட்டை பேணுதலும், ஏக்கர் வரி அறவிடலும்<br>➢ 200ஏக்கர் விஸ்தீரணத்திலும் குறைவான பிரதேசங்களில் நீர்ப்பாசன முறைமைகளைப் புனரமைத்தல். |

| நிறுவனம் | கருமங்கள் |
| --- | --- |
| கடற்றொழில் நீருயிரினவளத் திணைக்களம் | ➢ மீனவர்களையும் மீன்பிடிப் படகுகளையும் பதிவு செய்தல்.<br>➢ புதிய தொழினுட்பத்தை பிரபல்யப்படுத்தலும் அது தொடர்பாக செயற்படலும். |




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



| நிறுவனம் | கருமங்கள் |
|---|---|
| விவசாய கமநலக் காப்புறுதி சபை | ➶ விவசாயிகளின் ஓய்வுதியத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>➶ விவசாய உபகரணங்களை காப்புறுதி செய்தல்<br>➶ நெல், மிளகாய், சோளம், சின்ன வெங்காயம் போன்ற பயிர்களைக் காப்புறுதி செய்தல் |

| நிறுவனம் | கருமங்கள் |
|---|---|
| அறுவடைக்குப் பிந்திய தொழினுட்ப நிறுவனம் | ➶ விவசாய சந்தைப்படுத்தல் வலையமைப்புக்களை நிறுவுதல்.<br>➶ விவசாயப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் தொடர்பான தொழினுட்ப சிபாரிசுகளை வழங்குதல்.<br>➶ அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைப்பதற்கான சிபாரிசுகளை முன்வைத்தலும் தொழினுட்பத்தை வழங்கலும். |

| நிறுவனம் | கருமங்கள் |
|---|---|
| தேசிய உரச் செயலகம் | ➶ உரப்பயன்பாட்டை முறைமைப்படுத்தும் சட்டத்தை அமுல்செய்தல்.<br>➶ பசளை இறக்குமதி, விநியோகம் ஆகியவற்றை இணைப்பாக்கம் செய்தல்.<br>➶ பயிர்ச்செய்கைக் கோலங்களுக்கமைய பசளைத் தேவைகளை இனங்காணல்.<br>➶ பசளை இருப்புத் தொடர்பான கணக்கெடுப்பை மெற்கொள்ளல்<br>➶ பசளைத் தரத்தை உறுதிப்படுத்தல். |



தொகுப்பு - திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு - திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த.தொ.தொ. (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## விவசாயம் சார் சேவை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள்.

### 1. தனியார் நிறுவனங்கள்

| | |
|---|---|
| வித்துக்கள், பசளை வகைகள், விவசாய இரசாயனங்கள் உற்பத்தி | C.I.C கம்பனி<br>ஹேலிஸ் கம்பனி<br>லங்கெம் கம்பனி<br>பவர் கம்பனி |
| கடன் வழங்கல் | செலான் வங்கி<br>சம்பத் வங்கி |
| விவசாய விளைபொருட்கள் கொள்வனவு செய்தல் | கூட்டுறவுச் சங்கங்கள்<br>சதொச |
| விலங்கு உணவுகள் உற்பத்தி செய்தல் | பிறீமா நிறுவனம் |

### 2. சர்வதேச நிறுவனங்கள்

ஐக்கிய நாடுகள் தாபனத்தின் (UNO) கீழ் உள்ள நிறுவனங்கள்

| | |
|---|---|
| FAO | உணவு விவசாய தாபனம் |
| IRRI | சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் |
| IWMI | சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் |
| WHO | உலக சுகாதார தாபனம் |
| World vision | வீட்டுத்தோட்ட செய்கையும் குடும்ப போசாக்கூட்டலும் |
| CARE international | விவசாய செயற்றிட்டத்திற்கு ஊக்கமளித்தல் |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## 3. வெகுசன அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள்

- இலங்கை கமத்தொழிலாளர் சங்கம்
- விவசாய அமைப்பு

இவ்வமைப்பினால் ஆற்றப்படும் கருமங்கள்

- பிரதேச மட்டத்தில் விவசாய நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
- உள்ளீடுகளை விநியோகித்தலும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தலும்
- விவசாய நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்
- விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களிற்கு நன்மை தரும் எனக் கருதும் பணி-களை கமநல சேவைகள் ஆணையாளரின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்தல்.
- சேதனப் பயிர்ச்செய்கை, நச்சுத்தன்மையற்ற உணவுகள் போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுத்தல்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# தரம் 12,13



**விவசாயம் சார் சேவை வழங்கும் அரச நிறுவனங்களை கீழ்க்காட்டப்பட்டவாறு வகைப்படுத்தலாம்.**

| விரிவாக்கம் மற்றும் பயிற்சி சேவைகள் தொடர்பான நிறுவனங்கள் | விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் | சந்தைப்படுத்தல் தொடர்பான நிறுவனங்கள் | அறுவடைக்குப் பிந்திய பதப்படுத்தல் நிறுவனங்கள் |
|---|---|---|---|
| விவசாயத் திணைக்களம் | நெல் - பத்தலகொட<br>-அம்பலாந்தோட்டை<br>-போம்புவல | நெற் சந்தைப்படுத்தல் சபை | அறுவடைக்கு பிந்திய தொழினுட்ப நிறுவனம்<br>- அனுராதபுரம் |
| ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | பூங்கனியியல்<br>- கன்னொருவ<br>- ஹொறணை<br>- சீதாஎலிய<br>- பண்டாரவளை | கூட்டுறவுத் திணைக்களம் | |
| சிறு தேயிலைத்தோட்ட அபிவிருத்தி அதிகார சபை | களப்பயிர்கள்<br>- மகா இலுப்பல்லம | கால்நடை வளர்ப்பு சபை | |
| தெங்கு செய்கை சபை | தேயிலை<br>- தலவாக்கலை<br>- கண்டி | பொருளாதார மத்திய நிலையம் | |
| நீர்வாழ், நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை | இறப்பர் - அகலவத்தை | தேயிலை சபை | |
| மீன்பிடி, நீர்வளத் திணைக்களம் | தென்னை - லுணுவில | ஏற்றுமதி அபிவிருத்தி சபை | |
| கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம் | கறுவா - கம்புறுபிட்டிய | | |
| | ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் | | |
| | கரும்பு - உடவளவை | | |

தொகுப்பு - திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு - திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த.தொ.தொ. (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



## மதிப்பீட்டு வினாக்கள்



1) விவசாயக் கைத்தொழிலில் வெவ்வேறு நிறுவனங்களின் அவசியத்தை பட்டியலிடுக?
2) விவசாய அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் கல்வி நிறுவனங்களையும் அவற்றினால் ஆற்றப்படும் கருமங்களையும் சுருக்கமாக குறிப்பிடுக?
3) வெகுசனஅமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்களினால் விவசாயக் கைத்தொழிலிற்கு கிடைக்கும் அனுகூலங்களை குறிப்பிடுக.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு - திருமதி யாழினி ரவீந்திரன் , ஆசிரியர் - விவசாய விஞ்ஞானம் (யா/ யாழ் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு - திரு கோ.கேதாரன், ஆசிரியர் - த.தொ.தொ. (வ/தரணிக்குளம் கணேஸ் வித்தியாலயம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk